(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.10/2023 |
| Deposition Of Witness for | : | PW1 |
| Name | : | **Tmt.A.Asha Ajith** |
| Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **04th October 2024.**

(எதிரி ஆஜர்.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது சிவகங்கை மாவட்ட ஆட்சியாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக 11.09.2023 அன்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகத்திலிருந்து முதல் தகவல் அறிக்கை, சாட்சிகளின் வாக்குமூலங்கள், எதிரியின் வாக்குமூலம்,

ஒப்படைப்பு மகஜர், பகுப்பாய்வு அறிக்கை மற்றும் வழக்கின் இதர ஆவணங்கள் பெறப்பட்டது. இந்த வழக்கில் குற்ற எண்.4/2023 ஊ.த.சட்டம் 1988 (as amended in 2018) பிரிவு 7(a), 12 ன் படி எதிரியான நாச்சியப்பன், கல்லல் பஞ்சாயத்து தலைவர் அவர்கள் மீது குற்ற வழக்கு தொடர எனக்கு மேற்கண்ட ஆவணங்கள் வரப்பெற்றன.

2. நான் இவ்வழக்கின் ஆவணங்களை முழுமையா பரிசீலனை செய்தேன். அதன் பிறகு 12.10.2023 அன்று வழக்கின் புலன் விசாரணை அதிகாரியிடம் பகுப்பாய்வு அறிக்கை பற்றி விபரம் கேட்டு முழுமையாக வழக்கின் விபரத்தையும் கலத்து ஆய்வு செய்தேன். அவ்வாறு முழுமையாக பரிசீலனை செய்ததில் எதிரி நாச்சியப்பன் மீது குற்ற வழக்கு தொடர போதிய முகாந்திரம் இருப்பதாக நான் கருதினேன். நான் இந்த வழக்கில் என்னுடைய முழுமனதை செலுத்தி ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரி மீது குற்ற வழக்கு தொடர இசைவாணை 12.10.2023 அன்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் இசைவாணை நான் வழங்கியது தான். அந்த **இசைவாணை அ.த.சா.ஆ.1** ஆகும். எதிரியை பணி நீக்கம் செய்ய தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டத்தின் படி எனக்கு அதிகாரம் உள்ளது.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சென்னை இயக்குநரகத்திலிலுந்து வந்த வழக்கு கோப்பினை நான் எந்த தேதியில் பார்வையிட்டேன் என்றால் ஞாபகமில்லை. இசைவாணை வழங்குவதற்கு முன்பாகவே நான் வழக்கு கோப்பினை பார்வையிட்டேனா என்றால் ஆமாம். நான் அவ்வாறு பார்வையிட்டபோது மனநிறைவு அடைந்தேனா என்றால் ஆமாம். நான் அவ்வாறு பார்வையிட்ட அன்றே நான் இசைவாணை வழங்கினேனா என்றால் இல்லை. அதன் பிறகு விளக்கம் கேட்பதற்காக நான் புலன் அதிகாரியை வரச்சொன்னேனா என்றால் ஆமாம். முதல் முறையே மனநிறைவு ஏற்பட்டபிறகு எதற்காக நான் புலன் விசாரணை அதிகாரியை வரச்சொன்னேன் என்றால் Further Clarification ஏதாவது இருக்கிறதா என்பதை கேட்பதற்காக வரச்சொன்னேன்.

2. எது குறித்து Clarification கேட்பதற்காக புலன் விசாரணை அதிகாரியை நான் வரச்சொன்னேன் என்றால் இந்த வழக்கு சம்பவம் குறித்து முழுமையாக Discuss செய்வதற்காக வரச்சொன்னேன். அவருடன் Discuss செய்த பிறகு தான் எனக்கு முழுமனநிறைவு எனக்கு ஏற்பட்டதா என்றால் இல்லை, நான் முதல் முறை கோப்பினை பார்வையிட்டதும்

மனநிறைவு ஏற்பட்டது. நான் வழக்கு கோப்பை பார்வையிட்டபோது எதிரி நாச்சியப்பன், ஊராட்சி மன்ற தலைவர் நேரடியாக லஞ்சம் பெற்றதாக எந்த குறிப்பும் அதில் இல்லை என்றால் எதிரி நாச்சியப்பன் லஞ்சம் கேட்டதாக அதில் குறிப்பு இருந்தது.

3. நான் ஆவணங்களை பார்வையிட்டபோது எதிரி திரு.நாச்சியப்பன் லஞ்சம் பெற்றதாக அவரைப்பொறுத்து இரசாயன பரிசோதனை எதுவும் நடைபெற்றதாகவும் குறிப்புகள் எதுவும் இருந்ததா என்றால் இல்லை. நான் கோப்பினை பார்வையிடும் போது எத்தனை சாட்சிகளின் வாக்குமூலங்கள் அதில் இணைக்கப்பட்டிருந்தது என்றால் 16 பேர்களின் வாக்குமூலங்கள் அதில் இணைக்கப்பட்டிருந்தது. என்னுடைய இசைவாணையில் Enclosure ல் என்னென்ன ஆவணங்களை நான் பார்வையிட்டேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் இல்லை, ஆனால் என்னென்ன ஆவணங்களை பரிசீலனை செய்தேன் என்று இசைவாணையில் குறிப்பிட்டுள்ளேன்.

4. ஊராட்சி மன்ற தலைவருக்கு ஊதியம் உண்டா என்றால் பஞ்சாயத்து சட்டத்தின்படி இல்லை. வீட்டுவரி பெயர் மாற்றம் செய்வது சம்பந்தமாக மனு கொடுக்க வேண்டுமா என்றால் ஆமாம். இந்த வழக்கில்

வீட்டுவரி பெயர் மாற்றம் செய்வதற்கு புகார்தார் பாலாஜி எந்த தேதியில் மனு செய்தார், அந்த மனுவினை நான் பார்வையிட்டேனா என்றால் மார்ச் மாதம் 2023 அன்று மனு செய்திருக்கிறார், அந்த விண்ணப்பம் இசைவாணை வழங்க வேண்டி அனுப்பப்பட்ட கோப்பில் இல்லை. அதுபோல், பழைய வரி பாக்கி இருந்து, அந்த பழைய வரி பாக்கியை வசூல் செய்த பிறகு தான் புதிய வரி போட முடியுமா என்றால் வரி பெயர் மாற்றம் செய்த பிறகும் பழைய வரி பாக்கியை வசூல் செய்து கொள்ளலாம். நான் இதற்கு முன்பாக இசைவாணை வழங்கியுள்ளேனா என்றால் மாவட்ட ஆட்சியாக இசைவாணை வழங்குவது இதுதான் முதல்முறை.

5. கலந்தாய்வுக்காக புலன் விசாரணை அதிகாரியை நான் வரச்சொன்னபோது மாதிரி இசைவாணையை தயார் செய்து கொண்டு வந்திருந்தார் என்றும் அந்த இசைவாணையில் இயந்திரத்தனமாக நான் கையொப்பம் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2024.10.04 15:57:55 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.